# இந்திய மண்ணில் அன்னிவூட்பெஸன்ற் - ஒரு நோக்கு


**By**

## கேசவன், எஸ்.

*மேனாள்தலைவர், விரிவுரையாளர் - G-1, இந்துநாகரிகத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.*



**ஆய்வுச்சுருக்கம்**

*நவீன காலத்து சீர்திருத்த சிந்தனையாளருள் ஒருவர் அன்னவூட்பெஸன்ற். லண்டனில் பிறந்த இவர் இந்திய இயக்கத்தின் அகில இந்திய தலைவராக உயர்ந்தவர். அவர்தான் அன்னிபெஸன்ட் அம்மையார் ஆவார். அவரது கருத்துக்களில் நிறைய முரண்பாடு இருந்தாலும் அவரது தியாக உழைப்பை, போராட்ட குணத்தை போற்றாமல் இருக்க முடியாது. சிறுவர்களுக்கான கதைகள், கட்டுரைகளும் இதில் அடங்கும். பண்ணை விவசாயிகளின் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்தார். நாத்திகத்தைக் கைவிட்டு ஆத்திகராதல், பிரம்மஞான சபையின் தலைவி, சமயம், தத்துவம், அறிவியல் ஆகியவற்றில் ஒப்பாய்வு செய்தவர். இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்பு, காங்கிரஸ் தலைமைப் பதவி, காசிப்பல்கலைக்கழகத்தில் சேவை என பல சேவைகள் புரிந்தவர் ஆவார்.*



***கலைச்செற்கள்*** - *அன்னிவுவூட்பெஸன்ற் (AnniewoodBesant) நவீனகால சீர்திருத்தவாதி பிரம்மஞான சபை, இந்திய விடுதலைப்போராட்டம், காங்கிரஸ் தலைமைப்பதவி, காசிப்பல்கலைக்கழகம், சமயம், தத்துவம், அறிவியல்.*


### ஆய்வு அறிமுகம்

நவீன காலத்து சீர்திருத்த சிந்தனையாளருள் ஒருவர் அன்னவூட்பெஸன்ற். லண்டனில் பிறந்த இவர் இந்திய இயக்கத்தின் அகில இந்திய தலைவராக உயர்ந்தவர். ஆவர்தான் அன்னி பெஸன்ட் அம்மையார் ஆவார். அவரது கருத்துக்களில் நிறைய முரண்பாடு இருந்தாலும் அவரது தியாக உழைப்பை, போராட்ட குணத்தை போற்றாமல் இருக்க முடியாது. எனவே அவரது சேவையை சமுகத்திற்கு கொண்டு செல்வதே ஆய்வாளரது முக்கிய நோக்கமாகும்.

### இளமைக்காலமும், இல்வாழ்க்கையும்

அன்னவூட்பெஸன்ற். அக்டோபர் 1, 1847-ம் ஆண்டு ஒரு சாதாரண ஐரியக் குடும்பத்தில் லண்டன், ஐக்கிய இராச்சியத்தில் பிறந்தார்.[1] தந்தை வில்லியம் பைஜ்வூட் அயர்லாந்தில் பிறந்து லண்டனில் குடியேறியவர். அவரது குடும்பம் மிகவும் ஏழ்மையான குடும்பம். இயற்பெயர் அன்னிவூட் என்பதாகும். வறுமையில் வாடிய லண்டன் குடிசைப்பகுதிக் குழந்தைகளுக்கு ரொட்டித் துண்டுகளும் கல்வியும் புகட்ட, ‘பசித்த சிறுவர் இல்லாச் சமூகம்’ (No more-Hungry Children) எனும் குழுவை அன்னிவூட் அமைத்து வழி நடத்திய போது அன்னிவூட்டிற்கு பதினொரு வயது ஆகும். இவர் தனது 19-வது வயதில் 1867-ஆம் ஆண்டில் பிராங்க் பெசண்ட் என்ற 26 வயதுடைய மத குருவை மணந்தார்.[2] அன்னிவூட் பெஸன்ட், ஐந்து வயதாக இருக்கும் போது தந்தையை இழந்தார். அன்னை ஹரோ நகரில் ஆண்கள் பாடசாலை ஒன்றை நடத்தி வந்தார். டிக்பி, மேபெல் என்ற இரண்டு பெண் குழந்தை களைப் பெற்றெடுத்தார். கணவருடன் இணைந்து வாழ்வது அன்னிக்கு மிகவும் கடிடமாக இருந்தது.

மகளுக்கு ஏற்பட்ட நோயும் அவரது வாழ்வியல் சூழலும் அன்னிக்கு கடவுள் மீதான

அவநம்பிக்கையை விதைத்தது. மகளுக்கு ஏற்பட்ட நோயின் காரணமாக மனமுடைந்து போன இவர் நாத்திகரானார். கணவன், மனைவியை கோயிலுக்கு செல்லும் படியும் கிறிஸ்தவக் கொள்கைக் கேற்ப நடக்குமாறும் கூறினார். சுதந்திர மனப்பாங்கு கொண்ட இவர் கணவரிடம் இருந்து 1873-இல் பிரிந்து வாழ முடிவெடுத்தார். இறுதியாக கணவன், குழந்தைகளை விட்டுப் பிரிந்து லண்டனுக்குத் திரும்பினார். அதிகாரபூர்வமாகப் பிரிவினை கிடைக்கவில்லை. இரண்டு குழந்தைகளும் பிராங்கின் பொறுப்பிலேயே இருந்தனர்.

### அரசியலில் ஈடுபாடு

அன்னியின் அரசியல் போக்கு கணவரிடம் இருந்து அவரை மேலும் பிரித்தது. கணவரிடம் இருந்து பிரிந்த பின்னர் நிறைய கட்டுரைகள் எழுதத் தொடங்கினார்.[3] சிறுவர்களுக்கான கதைகள், கட்டுரைகளும் இதில் அடங்கும். பண்ணை விவசாயிகளின் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்தார்.

### சீர்திருத்தவாதி

“நியூமால் தூசியன் அமைப்பு” என்ற சீர்திருத்தச் சங்கத்துக்குத் தலைவியானார் அன்னிபெசண்ட். நாடாளுமன்ற அங்கத்தினர்கள் கடவுளின் பெயரால் சத்தியம் செய்யத் தேவை யில்லை என்று வற்புறுத்தி கூட்டங்களில் பேசினார். “லிங்க்” என்ற பெயரில் பத்திரிகையைத் தொடங்கி, இந்தியாவிலும் அயர்லாந்திலும் விடுதலைப் போராட்டங்களுக்கு ஆதரவாக எழுதினார். மூடப்பழக்கவழக்கங்களுக் கெதிராகப் பரப்புரையை ஆரம்பித்தார். இதனால் மத சமூகத்தினரின் எதிர்ப்புக்கு ஆளானார்.[4]

இலங்கையிற் கொலோனல் ஓல்கொட், அநாகரிக தர்மபாலாவுடன் இணைந்து பௌத்த பிரமஞானத்தைப் பிரசாரம் செய்தும் பௌத்த சமயஞ் சார்ந்த பாடசாலைகளை நிறுவியும் (ஆனந்தக் கல்லூரி முதலாகப் பல பள்ளிகள்) பணிபுரிந்தார்.

### நாத்திகத்தைக் கைவிட்டு ஆத்திகராதல்

The Secret Doctrine என்ற நூலை எழுதிய பிளேவட்ஸ்கி அம்மையாரை பாரிசில் 1889-ஆம் ஆண்டில் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. இது அன்னி பெசண்டின் வாழ்க்கையில் ஆன்மீகம் சார்ந்த பெரும் மாறுதலை ஏற்படுத்தியது. தன்னுடைய நாத்திக வாதத்தைக் கைவிட்டு ஆத்திகரானார். பிளேவட்ஸ்கியின் பிரம்மஞான சங்கத்தில் உறுப்பினரானார். இதனை அடுத்து மார்க்சியவாதிகளுடன் தனக்கிருந்த உறவு களைத் துண்டித்துக் கொண்டார். அச்சபையின் சார்பில் 1893-ஆம் ஆண்டில் சிகாகோவில் இடம்பெற்ற உலக கொலம்பிய கண்காட்சியில் கலந்து கொண்டார்.

### பிரம்மஞான சபையின் தலைவி

1893-ஆம் ஆண்டில் பிரம்மஞான சபையின் உறுப்பினராக முதற் தடவையாக இந்தியா வந்தார். சபையின் அமெரிக்கக் கிளையின் தலைவரான வில்லியம் ஜட்ஜ் என்பவருடன் ஏற்பட்ட கருத்து மோதல்களைத் தொடர்ந்து அமெரிக்கக் கிளை தனியாகப் பிரிந்தது. மீதமிருந்த சபை ஹென்றி ஸ்டீல் ஓல்கொட் என்பவராலும் அன்னி பெசண்டினாலும் தலைமை வகிக்கப்பட்டது.[5]

இதற்கு ஆன்மிக வாழ்க்கையைப் பற்றிச் சிறப்பாக பேசும் பல இறையியல் நூல்களைக் ஆதாரமாகக் கொண்டார். அவற்றில் சில வருமாறு,

1. ஹச். பி. பிளாவட்ஸ்கி – வழிமுறைத் தெய்வீகம் (Practical Occultism)
2. ஹச். பி. பிளாவட்ஸ்கி – மௌனத்தின் குரல் (Voice of the Silence)

3. சி. டபிள்யூ. லீட் பீட்டர் - குருமார்களும், பாதையும் (The Masters and the path)
4. ஆல்ஸியோன் - குருநாதர் திருவடியில் (At the feet of the Master)
5. இவற்றுடன் தான் எழுதிய,
    - அன்னிபெசன்ட் - ‘வெளிப்புறத்தில்’ (In the outer Court),
    - அன்னிபெசன்ட் - சீடனாகும் மார்க்கம் (The path of discipleship) இவரது இன்னும் பல நூல்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.[6]

**சமயம், தத்துவம், அறிவியல் ஆகியவற்றின் ஒப்பாய்வு (The Essential Unity if all religions)**

டாக்டர் பகவான்தாஸ், ‘சமயங்களின் இன்றியமையாத ஒற்றுமை’ என்ற தமது நூலில் கூறுகிறார் (ப.14), இயற்கையை ஆளும் ஒருமைப்பாடுதான் பண்பட்ட கூட்டமைப்பு, இரக்கம் ஆகியவற்றுக்கு ஆதாரம். சமயங் களுக்கிடையே உள்ள அவ்வொருமைப் பாட்டைக் கண்டறிவதே பண்பாட்டை வளர்க்கும்.’ இறையியல் (Theosophy) நோக்கில் சமயங்களை அன்னவூட்பெஸன்ற் ‘ஏழு பெருஞ் சமயங்கள்’ (Seven Great Religions)[7] வகைப்படுத்தியுள்ளார். பிரம்மஞான சபைக்கு இந்தியாவில் பல கிளைகள் உள்ளன. அவை இந்திய சமய, சமூக சீர்திருத்தங்களுக்குத் தம்மாலான பங்களிப்பை வழங்கின.

அன்னிபெசன்ட் அம்மையார் பிரம்ம ஞானிகள் பின்வரும் விதிகளைப் பின்பற்ற வேண்டும் என விதித்தார்.

1. சாதி வேறுபாடு பார்க்கக் கூடாது.
2. பெண் குழந்தைகளுக்கும் மனைவிக்கும் கல்வி போதிக்க வேண்டும்.
3. பெண்களுக்கு 21 வயதுக்குள் திருமணம் செய்யக்கூடாது. விதவை மறுமணத்தை ஆதரித்தல் போன்றன. இவற்றை தானே பின்பற்றிக் காட்டினார்.

**இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்பு**

இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சியை எதிர்த்து நடந்த பல போராட்டங்களை படித்தும், நேரில் பார்த்தும் வளர்ந்ததால் ஆங்கில அரசின் அடக்குமுறைகள் அவரை வெகுவாகப் பாதித்தன. இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாக ‘காமன் வீல்’ என்ற வாரப் பத்திரிகையை 1913-ம் ஆண்டில் ஆரம்பித்தார். 1914-ஆம் ஆண்டில் சென்னையில் இருந்து நியூ இந்தியா என்ற பெயரில் நாளேடு ஒன்றை ஆரம்பித்து நடத்தினார். இதன் மூலம் அவர் அரசியலில் களம் இறங்கினார்.

இந்திய தேசிய காங்கிரஸின் ஒருகால் தலைவியும், இந்திய தேசிய உணர்வுக்குத் தூண்டுகோலாய் அமைந்தவரும் தமது காலத்திலே தலைசிறந்த சொற்பொழிவாளராய்ப் போற்றப் பட்டவருமான அன்னவூட்பெஸன்ற் அம்மையார், இயற்கையிலேயே புரட்சி மனப்பான்மை கொண்டவராதலால், ஆங்கில அரசின் அடக்குமுறைகள் அவரை வெகுவாகப் பாதித்தன.

தேசிய அரசியலில் அன்னிபெசன்டை எதிர்த்த பாரதி இந்து மதத்திற்கு அன்னவூட்பெஸன்ற் ஆற்றிய பணிகள் அன்னிய ஜாதிகளில் பிறந்த போதிலும் அன்னிபெசன்டை இந்துவாக நான் பார்க்கிறேன். அவள் சரியான இந்து. ஆதலால் நம்முடைய சகோதரி என்பதை ஒப்புக் கொள்கிறோம். இந்துக்களே அன்னவூட்பெஸன்ற் றுக்கு நன்றி கூறவேண்டும் என்றுரைத்தார்.

**காங்கிரஸ் தலைமைப் பதவி**

1907-ஆம் ஆண்டில் சூரத் நகரில் இடம் பெற்ற இந்திய காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டார். இம்மாநாட்டில் மிதவாதிகளுக்கும் தீவிரவாதிகளுக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடு களினால் ஏற்படவிருந்த பெரும் பிளவைத் தவிர்த்து, லக்னோவில் இடம்பெற்ற மாநாட்டில் இரு பிரிவினரையும் இணைத்து வெற்றி கண்டார். ஹோம் ரூல் (சுயாட்சி) இயக்கத்தைத் தொடங்கினார். நாடு முழுவதிலும் அதன் கிளைகள் உருவாயின. அன்னவூட்பெஸன்ற் தனது தலைமைப் பதவிக் காலத்தில் நாடு முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு, விடுதலை இயக்கத்தை வலுப்பெறச் செய்தார். பிரித்தானியாவிற்கு பயணம் மேற்கொண்டபோது அங்கு இந்திய விடுதலைக்கு ஆதரவாக மேடைகளில் உரையாற்றினார். பொதுநலவாய இந்தியா என்ற பெயரில் அறிக்கை ஒன்றை பிரித்தானிய பாராளுமன்றத்துக்கு அனுப்பி வைத்தார்.[8]

அன்னிபெசண்டின் சுற்றுப் பயணங்களுக்கும் பொதுக் கூட்டங்களுக்கும் ஆங்கிலேய அரசு தடை செய்தது. 1917, ஜூன் 15-ஆம் நாள் ஏனைய காங்கிரஸ் தலைவர்களுடன் அன்னி பெசண்டையும் கைது செய்தது. டிசம்பர் 1917 ஆம் ஆண்டில் கல்கத்தாவில் நடந்த மாநாட்டில் இந்திய காங்கிரசின் தலைவராக ஓராண்டிற்குத் தெரிவானார். வெளிநாட்டில் பிறந்து இந்திய மக்களின் விடுதலைக்காக போராடிய அந்த பெண்மணிக்குக் கிடைத்த மகத்தான அங்கீகாரம் இது.

இவர்களின் கைதைக் கண்டித்து காங்கிரஸ் இயக்கம், மற்றும் முஸ்லிம் லீக் ஆகியன சத்தியாக்கிரகம் செய்யப் போவதாக அறிவித்தது. இதனால் நிலை குலைந்த ஆங்கில அரசு செப்டம்பரில் இவர்களை விடுதலை செய்தது. தனது எண்பத்தியோராவது அகவையில் தீவிர அரசியலில் இருந்து விலகிய அன்னி பெசண்ட் இறுதிக் காலங்களில் இந்திய மெய்யியலாளரான ஜிட்டு கிருஸ்ண மூர்த்தியுடன் நெருங்கிய தொடர்பைப்பேணினார். பிரம்மஞான சபையின் முன்னேற்றத்தில் முனைப்பாக ஈடுபட்டார்.

**காசிப்பல்கலைக்கழகம்**

காசியில் சில காலம் வசித்த அன்னிபெசண்ட அங்கு இந்து சமய விளக்கங்களை முறைப்படி கற்றார். இந்து சாத்திரங்களை ஆழ்ந்து படித்து பல நூல்களை எழுதினார். பகவத்கீதையை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். இந்திய உடை தரித்து இந்துவாகவே வாழலானார்[9] (தினமணி.com). எல்லாப் பணிகளிலும் முதன்மையாக இந்தியா முதலில் மேற்கொள்ள வேண்டியது, அது தன் புராதன சமயங்களுக்குப் புத்துயிரும் வலுவும் அளிப்பதேயாகும். இதன் மூலம் சுய கௌரவமும் இறந்த காலம் பற்றிய பெருமித உணர்வும் எதிர் காலத்தின் மீது நம்பிக்கையும் பிறக்கும். இவற்றின் விளைவாக நாட்டுப் பற்றென்னும் பேரலைகள் எழுந்து நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கான தொடக்கம் உருவாகும் என்பது அன்னிபெசன்டின் கூற்று. தாம் அறிவுறுத்திய உண்மைக்குச் செயலுருவம் வழங்கக் காசியிலே இந்து உயர்பள்ளியைத் தமது சொந்த மூலதனத்தை இட்டு அவர் தொடங்கினார், அது கல்லூரியாய் வளர்ந்து, 1915-இல் காசிப்பல்கலைக்கழகம் ஆயிற்று.

**முடிவுரை**

பிரம்மஞானவாதி, பெண்ணுரிமைவாதி, சிறந்த பேச்சாளர், எழுத்தாளர் என அறியப்பட்ட அன்னிவூட் பெஸன்ட் எண்பத்தேழாம் அகவையில் செப்டம்பர் 20, 1933 அடையாறு, தமிழ்நாடு, இந்தியாவில் காலமானார். அவரது

மறைவிற்குப் பின்னர், அவரது நண்பர்கள் ஜே.கிருஸ்ணமூர்த்தி, ஆலடஸ் ஹக்ஸ்லி, ரோசலின் ராஜகோபால் ஆகியோர் இணைந்து கலிபோர்னியாவில் "ஹப்பி வலி எனும் பாடசாலையை அமைத்தார்கள். இப்பாடசாலை தற்போது அன்னிபெசண்டின் நினைவாக பெசண்ட் ஹில் பாடசாலை எனப் பெயர் மாற்றப்பட்டுள்ளது. அன்னிபெசண்ட் அமைத்த சென்னை அடையாறில் உள்ள பிரும்மஞான சபை இன்றும் அவர் புகழ் பரப்பிக் கொண்டிருக்கிறது. கலிபோர்னியாவில் இவரது நினைவாகக் பெசன்ட் பாடசாலை காணப்படுகிறது. இதன் கிளைக்கல்லூரி பெசன்ட் பிரம்மஞான கல்லூரியாகும்.

## அடிக்குறிப்பு

1. vikatan.com
2. tamil.samayam.com
3. wikipedia.
4. The history of Birkbeck, university of London
5. சென்னை அடையாற்றில் பிரமஞான சபையை உருவாக்கி அதன் தலைவியாய் விளங்கினார். பிரம்மஞானத்தின் சாரம் அனைத்தையும் தொகுத்து வழங்கியவராக அவர் கொள்ளப்படுகிறார்.
6. Immediate Future, Influence of Alcohol, Karma, Laws of the Higher Life, Life and Life after Death, Man and His Bodies, Meaning and Method of Spiritual Life, Modern Science and the Higher Self, Mysticism, On Moods, Pain – It's Meaning and Use, Path of Discipleship, Public Spirit, Ideal and Practical, Reality of the Invisible, Reincarnation, Riddle of Life, Seven Principles of Man, Some Difficulties of Inner Life, Some Problems of Life, Spiritual Life – Volume 11, Spiritual Life for the Man of the World, Study in Consciousness, Study in Karma, Theosophy and the New Psychology, Thought Forms, Thought Power, Value of Devotion, Vegetarianism in the Light of theosophy, Voice of the Silence – Commentary, Web of Life, When A Man Dies, Shall He Live Again, World Religion
7. பிரம்மஞான சபை (இறையியல் கழகம்), பக். 417-418
8. கௌசிகன், வரலாறு படைத்த உத்தமர்கள், கங்கை, சென்னை. 2003, பக்-407
9. தினமணி.com

## To cite this article

*****************

Kesvan, S. (2021). இந்திய மண்ணில் அன்னிவூட்பெஸன்ற் - ஒரு நோக்கு. *Sparkling International Journal of Multidisciplinary Research Studies, 4*(2), 19-24.

***************************************************************************************

## ABOUT THE AUTHOR



***DR S. Kesavan*** *is a Former Head/Hindu civilization, Department of Hindu Civilization, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka. She has completed 35 years of service. She has been a Graduate Teacher, In-service Advisor, and has been Senior Lecturer and Head of the Department of Hindu Culture Faculty of Arts Eastern University since 2001. She has also been In-charge of various events at Eastern University such as Swamy Vipulanandar memorial Talks, cultural festivals, International Conferences and seminars, The late Honorable Minister's Memorial Annual Talks, and Ancient Exhibitions. She got a Master's Degree in "Temple Management, Tourism and Philosophy" at Tamil University, Thanjavur, Tamilnadu, India and Ph.D. from the University of Peradeniya, Sri Lanka, based on The Philosophical concept of "Kannaki Cult in Batticaloa region in Srilanka. She has published 15 books so far. These talk about Hinduism, historical, culture and Hindu philosophy. Fine Arts. In 2015, she published 451–pages of the book entitled "Modernist Thinkers and the Advancement of Women" research book published on Cultural monuments in Srilanka. She has read sixty five articles in national and international seminars, especially in Sri Lanka, India, Switzerland, Australia, Malaysia, Canada, and America.*

*************************************************************************************